3rd September 1959]

(ஆ) 1959–60-ம் நிதி வருடத்திலே எந்தெந்த இடங்களிலே வன விலங்கு சரணாலயங்கள் ஏற்படுத்தப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There is no approved proposal to open wild life sanctuaries during the Second Five-Year Plan period. However a proposal to open a wild life sanctuary at Muthukulivayal in Kanyakumari district is under consideration of the Government.

SRI P. G. MANICKAM : ஸார், இந்த ராஜ்யத்தில், அதாவது தமிழ் நாட்டில், அதிகமான அளவில் பாரஸ்டு இருக்கிறது. இந்த பாரஸ்டுகள் எல்லாம் அதிகமாகவும் மைசூர் ராஜ்யத்தோடும், திருவாங்கூர் ராஜ்யத்தோடும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மத்தியில் வன விலங்கு சரணாலயம் அமைப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மைசூர் பக்கத்தில்தான் இப்போது முதுமலை இருக்கிறது. பறவைகளுக்காக வேடந்தாங்கல் இருக்கிறது. கிண்டியிலும் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுதவிர கன்னியாகுமரியிலும் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று யோசனை இருந்து கொண்டிருக்கிறது.

Grants-in-aid Code

* 102 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the *Ad hoc* Committee constituted by the Government for the revision of Grants-in-aid Code has finalised their proposals?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Committee has finalised its First List of Recommendations relating to Secondary Education.

SRI N. K. PALANISAMI : பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக கிராண்ட் கொடுப்பதைப்பற்றி என்ன சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது ? அதோடு இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களை விஸ்தரிப்பதற்கும் இதில் இடம் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை கல்வி ஆலோசனை குழுவின் முன்பு வைத்து பரிசீலனைசெய்து இதைப்பற்றியுள்ள எல்லா முடிவுகளையும் எடுக்கலாம் என்று நினைத்திருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether the *Ad hoc* Committee constituted for this purpose has taken into consideration subjects like rent for the school buildings, salary paid to the sweepers and watchmen and whether these were also included in their recommendations?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I have not yet gone through the recommendations, Sir.

Drinking Water-supply Scheme for Tiruppur

* 103 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the details of the Drinking Water-supply Scheme sanctioned for Tiruppur (Coimbatore); and

(*b*) the progress so far made and when the scheme is expected to be completed?

[3rd September 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Water-supply Scheme for the Tiruppur Municipality has been designed to cater to the needs of an ultimate population of one and a quarter lakhs expected in 1991 at 15 gallons per head per day. The source of the scheme is Rs. 108·45 lakhs.

(*b*) Sixty-eight per cent of the work has been completed. The scheme will be completed in 1960–61.

SRI N. K. PALANISAMI : இப்போது, லோயர் பவானியிலிருந்து தண்ணீர் எடுக்க சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கடலாறுவரையிலும் குழாய் போடப்பட்டிருக்கிறதே ! அது வரை குழாய் போடுவதற்குச் செய்யபபட்ட செலவு அனாவசியச் செலவு தானே ? கீழ் பவானியிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று ஏன் ஆரம்பத்திலேயே முடிவு செய்யப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மேட்டுப்பாளையத்தி லிருந்துதான் தண்ணீர் எடுக்கப்போகிறார்கள். குழாயைப் பொறுத்த வரையில், பெரிய திட்டத்திற்கு பெரிய குழாய் போடவேண்டியிருக்கும். இதற்கு முன்பு போட்ட குழாய் சின்னக் குழாயாக இருக்கக்கூடும்.

Kundar Bridge in Shencottah taluk

* 105 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether work has been resumed in Kundar Bridge in Shencottah taluk;

(*b*) if so, when it will be completed; and

(*c*) if not, when the work will be resumed?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Tenders have been called for and the work will be taken up for execution after settlement of contract.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பால வேலை ஆரம்பமாகி நான்கு வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. இதற்கு முதலில் போட்ட எஸ்டிமேட் என்ன. 'டெக்' லெவலுக்குமேல் கட்டுவதற்கு எஸ்டிமேட் புதுப்பிக்கப்பட்டிருக்கிறதே ! பழைய எஸ்டிமேட் 50,000 ரூபாய் அளவில் இருந்தது. இப்போது இதற்கு 2 லட்சம் ரூபாய்க்கும் மேல் செலவாகும் என்று சொல்லுகிறார்களே ! முக்கால் பங்கு வேலை ஆன பிறகு ஏன் செலவு அதிகமாகிறது ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே, இதற்கு திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய சர்க்காரால் 50,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருந்தது. செங்கோட்டைப் பகுதி நமது ராஜ்யத்திற்கு வந்த பிறகு நமது எஞ்சினியர்கள் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்தார்கள். இவர்கள், இதற்கு 50,000 ரூபாய் செலவு செய்தால் அமைப்பு நன்றாக நிலைக்காது என்று கூறியிருக்கிறார்கள். எனவே நமது ஸ்டாண்டர்ட் பிரகாரம் இதைக் கட்டத் தீர்மானித்தோம். அவ்வாறு கட்டுவதற்கு 1,80,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு அதற்கு மத்திய சர்க்காரிடம் அங்கீகாரம் கோரினோம். அவர்களும் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். திட்ட வேலையை கண்ட்ராக்டரிடம் கொடுத்து நடத்தி வருகிறோம்.